# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8073024

C

1. District : மாவட்டம் Dindigul PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 7/18 Date: நாள் 26.7.18

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988. Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 24.7.18 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1100 hrs Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.7.18 Time : நேரம் 16.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும்/ எத்திசையும் approximately 7 km South East.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி District Treasury Office of the Dindigul.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Selvaraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Muthan.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 59 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் ஓய்வு பெற்ற ஆசிரியர். (g) Address : முகவரி 3/1137, Vijayashree Nagar N.S. Nagar, Dindigul.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) A1. Chandran Superintendent District Treasury Office, Dindigul.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளரான நான் 25.07.2018ம் தேதி மாலை 16.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது M.செல்வராஜ், த/பெ R.முத்தையன், தொழிற் கல்வி ஆசிரியர் (ஓய்வு), 3/1137, விஜயஸ்ரீ நகர், N.S. நகர், திண்டுக்கல் என்பவர் கொடுத்த புகாரின்பேரில் கீழ்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் M.செல்வராஜ், த/பெ R.முத்தையன், தொழிற் கல்வி ஆசிரியர் (ஓய்வு), 3/1137, விஜயஸ்ரீ நகர், N.S. நகர், திண்டுக்கல். பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். எனக்கு ஒரு மகன் உள்ளார். அவர் சேலம் பெரியார் பல்கலைகழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பு இரண்டாம் ஆண்டு பயின்று வருகின்றார். எனது மனைவி புற்று நோயால் பாதிக்கப்பட்டு கடந்த 17.10.2010ம் தேதி இறந்தவிட்ட

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ம. செல்வராஜ் 26/7/18.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 26/7/18
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.7.18
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Gutha.
Rank: நிலை Inspector of Police. No. எண்
V&AC Dindigul.

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:7/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

இறந்துவிட்டார். நான் M.S.P. சோலை நாடார் நினைவு மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல்லில் தொழிற்கல்வி ஆசிரியராக 1988ம் வருடம் பணியில் சேர்ந்தேன். கடந்த 31.01.2018ம் தேதி நான் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். எனக்கு ஓய்வு பெற்றபின்பு கிடைக்கவேண்டிய பண பலன்கள் பெறுவது தொடர்பான கருத்துருக்கள் எங்களது பள்ளியில் தயார் செய்து மாவட்ட கல்வி அலுவலகத்தின் மூலமாக A.G. அலுவலகம், சென்னைக்கு அனுப்பப்பட்டது. அதன்பின்பு கடந்த 23.05.2018ல் A.G. அலுவலகம், சென்னையிலிருந்து எனது பண பலன்களை பெறுவதற்கான கணக்கீட்டுத்தாள் மாவட்ட கல்வி அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட கல்வி அலுவலக ந.க எண்.786/ஆ2/2018 நாள்- 19.07.2018ன் படி பட்டியல் தயார் செய்யப்பட்டு திண்டுக்கல் மாவட்ட கருவூலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் 23.07.2018ம் தேதி எங்கள் MSP பள்ளியின் கிளார்க் திரு.நாகேந்திரன் அவர்கள் திண்டுக்கல் மாவட்ட கருவூலத்திற்கு சென்றபோது, திரு.சந்திரன், கண்காணிப்பாளர், மாவட்ட கருவூலம், திண்டுக்கல் அவர்கள் எனது பட்டியல் தொடர்பாக என்னை நேரில் வந்து பார்க்க சொன்னதாக எனது அலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் கூறினார். அதன் பேரில் இன்று 24.07.2018 காலை சுமார் 11.00 மணியளவில் திண்டுக்கல் மாவட்ட கருவூல அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் திரு.சந்திரன் அவர்களை நேரில் சந்தித்தேன். அப்போது அவர் பணிக்கொடை பட்டியல் ரூ.8,53,486/- மற்றும் நான்கு மாதத்திற்காக ஊதிய நிலுவைத் தொகை ரூ.2,25,220/- ஆக மொத்தம் ரூ.10,78,706/-க்கான பட்டியல் கருவூலத்தில் காசாக்கம் செய்யப்படுவதற்காக மாவட்ட கல்வி அலுவலகத்திலிருந்து பெறப்பட்டுள்ளது என்றும் அதனை பார்வையிட்டு பரிந்துரை செய்து மேலே அனுப்பி காசாக்கம் செய்து, எனக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய பணிக்கொடைக்கு ரூ.8,000/-ம், ஊதிய நிலுவைத் தொகைக்கு ரூ.2,000/-ம் ஆக மொத்தம் ரூ.10,000/-ம் தனக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் உடனே இது அரசுக்கு செலுத்தவேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு கண்காணிப்பாளர் திரு.சந்திரன் அவர்கள் தங்களுக்கு விபரம் போதாது, வழக்கமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களிடம் பணம் வாங்கும் நடைமுறைதான் என்றும், மேற்சொன்ன பட்டியல்களை காசாக்கம் செய்வதற்காக அவர் பரிந்துரை செய்து மேலே அனுப்பி எனக்கு கிடைக்க ஏற்பாடு

செய்ய அவருக்கு ஆகும் செலவு என்றும் கூறினார். நான், அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்றும், மேற்படி லஞ்சப் பணத்கை குறைத்துக் கொள்ளுமாறு வேண்டினேன். அப்போது அவர் ரூ.2,000/-ம் குறைத்து, ரூ.8,000/-த்தை வரும் 26.07.2018ம்தேதி மதியம் வாக்கில் எனது அலுவலகம் வந்து கொடுத்தால்தான் உங்களுடைய பட்டியல்களை நான் முன்பு சொன்னது போல் காசாக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் இல்லை என்றால் நீங்கள் அலைய வேண்டியது தான் என்று கறாராக கூறினார். அதற்கு நான் பணம் ரெடி பண்ணிவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். நான் ஆசிரியராக 22 வருடம் பணி நிறைவு செய்து, எனது ஓய்வூதிய பண பலன் சம்மந்தமான இரண்டு பட்டியல்களிலும் பரிந்துரை செய்து மேலே அனுப்பி எனக்கு கிடைக்க எற்பாடு செய்ய திண்டுக்கல் மாவட்ட கருவூல அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் திரு.சந்திரன் அவர்களுக்கு ரூ.8,000/- லஞ்சம் கொடுத்துப் பெற நான் விரும்பவில்லை. எனவே திரு.சந்திரன், கண்காணிப்பாளர், திண்டுக்கல் மாவட்ட கருவூலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இன்று 25.07.2018-ம் தேதி 16.00 மணிக்கு நான் இந்த புகார் மனுவினை கொடுக்கின்றேன். மேலும், கண்காணிப்பாளர் திரு.சந்திரன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.8,000/-ஐ கொண்டுவந்துள்ளேன். இம்மனுவுடன் மாநில கணக்காயர் அவர்களின் 09.05.2018-ம் தேதியிட்ட Gratuity தொகை ரூ.8,53,486/-க்கான கணக்கீட்டுத் தாளின் நகல் மற்றும் தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிற்கு கடந்த 15.07.2018ம் தேதி ஆன்லைன் மூலம் செய்த புகாருக்கு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரத்தினை முதலமைச்சரின் தனிப்பிரிவு இணையதளம் http://cmcell.tn.gov.in மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகலினையும் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxxx (மு.செல்வராஜ், 25.07.2018) Sir, Received the complaint on 25.07.2018 at 16.00hrs and the same was intimated to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai for necessary orders Sd/- xxxxxx (R.Geetha, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Dindigul). As per the orders of the Superintendent of Police, Southern range, Vigilance and Anti-Corruption, Chennai in PE.228/2018/T&A/DL, dated:25.07.2018, a preliminary Enquiry was registered. During verification the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal

gratification was confirmed through the sources. On the findings of the Preliminary Enquiry and after getting concurrence from the SPSR, V&AC., Chennai, the case in Dindigul V&AC., Cr.No.07/2018, u/s.7of Prevention of Corruption Act, 1988 was registered on 26.07.2018 at 12.15hrs. Sd/-xxxxxx (R.Geetha, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Dindigul) பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு அதனுடன் இணைந்த ஆவணங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geetha R 26/7/18

(R.Geetha)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.